**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 79** **நாள்: 07.02.2026**

**திரு.வி.க.நகர் மண்டலத்திற்குட்பட்ட தாங்கல் மயானபூமியில் பராமரிப்புப் பணிகள் நடைபெறவுள்ளதால், பொதுமக்கள் நேர்மை நகர் மற்றும் ஜி.கே.எம். காலனி மயானபூமிகளைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.**

பெருநகர சென்னை மாநகராட்சி, திரு.வி.க.நகர் மண்டலம், வார்டு-67க்குட்பட்ட தாங்கல் மயானபூமியில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ள உள்ளதால், 09.02.2026 முதல் 10.03.2026 வரை 30 நாட்கள் மேற்கண்ட மயானபூமி இயங்காது.

எனவே, பராமரிப்புப் பணிகள் நடைபெறும் நாட்களில், பொதுமக்கள் அருகிலுள்ள வார்டு-66க்குட்பட்ட நேர்மை நகர் மயானபூமி மற்றும் வார்டு-64க்குட்பட்ட ஜி.கே.எம். காலனி மயானபூமியினைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**செய்தி வெளியீடு** : **இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**